மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இல்லை தயவு செய்து உட்காருங்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர் ரைஸ் பண்ணுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. கொஞ்சம் கேளுங்கள் நான் சொல்வதை. 42-வது விதியின் கீழ் அமைச்சர் அறிக்கைப் படித்து விட்டால் அதை திரும்பவும் எழுப்ப கூடாது அதைப் பற்றி விமர்சிக்க கூடாது. வேண்டுமானால் தவறான தகவல் தந்தார் என்று எழுதி கொடுத்து உரிமைப் பிரச்னை கொண்டு வாருங்கள்.

திரு. க. சுப்பு : எழுதிக் கொடுக்காமலேயே கொடுக்கலாம் என்று செக்ஷன் 184-ன் கீழ் இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் மீது உரிமைப்பிரச்னை எழுப்புகிறேன். நான் விதிகளின் படியே போகிறேன். இப்பொழுதே இதற்கு முடிவு காண வேண்டும்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் தவறான தகவல் கொடுத்திருக்கிறார் என்று நினைத்தால், உரிமைப் பிரச்னையை எழுதிக் கொடுங்கள். அமைச்சர் அவர்களது விளக்கத்திற்கு பிறகு அவையின் இதர அலுவல்கள் ஒத்தி வைத்து விவாதிக்க தேவையில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. க. சுப்பு: எழுதிக் கொடுக்க வேண்டும் என்று இல்லை....

5. கவன ஈர்ப்புகள்.

(அ) நீலகிரி மாவட்டம், இதளார் பகுதியில் ஏற்பட்ட வகுப்புக் கலவரம் குறித்து.

[முற்பகல் 11.30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக்குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம். திருவாளர்கள் கே. உச்சி, க. அரங்கசாமி, ஏ. ஆர். மாரிமுத்து, துரை முத்துசாமி ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டு வருவார்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : பாயிண்ட் ஆப் ஆர்டர்சார்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பட்டது.

REPORTING SECTION

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு நா. சுந்தரராஜ் பேசியதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : ஹைகோர்ட் தீர்ப்புப்படியா இந்த சர்க்கார் நடக்கிறது ?

திரு. கே. உச்சி : துணைத் தலைவர் அவர்களே, ''நீலகிரி மாவட்டம், இதளார் பகுதியில் 1979 ஆம் ஆண்டு சனவரி மாதம் நடந்த கலவரத்தின் போது ஏற்பட்ட உயிரிழப்பு, பொருட் சேதம் காரணமாகப் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து'', என்கிற அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சருக்காக, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அறிக்கை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே. 1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 3 ஆம் நாள் அன்று மாலை சுமார் ஐந்து மணியளவில் ஊட்டியிலிருந்து வந்துகொண்டிருந்த பேருந்து இதளார் கிராமத்தில் நின்ற பொழுது தங்கப்பன் என்பவர் பேருந்தில் ஏறிக்கொண்டு பயணிகளை பேருந்தில் ஏறவிடாமலும் இறங்கவிடாமலும் தடுத்திருப்பதாகத் தெரிகின்றது. படுகர் இனத்தைச் சேர்ந்த மாத்தன் என்பவர் தங்கப்பனின் இந்த நடவடிக்கையைக் கண்டித்ததாகத் தெரிகின்றது. இதனால் இருவருக்கும் இடையே தகராறு மூண்டு ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டனர். இந்தச் சமயத்தில் படுகர் இனத்தைச் சேர்ந்த சிலர் தங்கப்பனை தாக்கியுள்ளதாகத் தெரிகின்றது—தங்கப்பன் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார். அங்கிருந்து படுகரல்லாதார் தங்கப்பனுக்கு தண்ணீர் கொடுக்க முனைந்தபோது படுகர்கள் தடுத்திருப்பதாகத் தெரிகின்றது. இதன் தொடர்பாக இருசாராருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டுள்ளது. தங்கப்பன் தாக்கப்பட்டது சம்பந்தமாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, அவர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். அமைதி காக்குமாறு இரு தரப்பினரையும் வேண்டியபொழுது அதற்கு சம்மதித்தனர். குற்றவாளிகள் தலைமறைவாகிவிட்டனர்.

1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 4 ஆம் நாள் அன்று காலையில் (சுமார் 7.45 மணி) படுகர் இனத்தைச் சார்ந்த சிலர், மற்ற ஜாதியினரை வீடுகளையும் கடைகளையும் காலிசெய்துவிட்டு வெளியேறும்படி மிரட்டியுள்ளதாகத் தெரிகின்றது.

[திரு. ச. இராமச்சந்திரன்]

[1979 மார்ச் 24

1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 4 ஆம் நாள் அன்று காலையில் படுகரல்லாத மற்ற ஜாதியைச் சேர்ந்த சுமார் 150 பேர்கள் இதளார் காவல் நிலையத்தில் கூடி குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர். தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறி துணை ஆய்வாளர் அவர்களை அமைதிப்படுத்தினார். அதே நேரத்தில் படுகர்களுக்குச் சொந்தமான குடியிருப்புகளில் வசிக்கும் மற்ற ஜாதியினர் ஒன்றுகூடி சுமார் 9.45 மணியளவில் படுகர்களின் வீடுகளுக்கும் ஜன்னல், கண்ணாடிகள் முதலியவைகளுக்கும் சேதமேற்படுத்த முனைந்துள்ளனர். இதனையறிந்த காவல் துறையினர் உடனே அங்கு விரைந்து வன்முறையில் ஈடுபட்ட கூட்டத்தைக் கலைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் அதற்குள்ளாக சுமார் 170 வீடுகளுக்கு, சுமார் ரூ. 7,000 அளவுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுவிட்டது. காயமடைந்த எட்டு பேர்கள் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர். இச்சம்பவம் சம்பந்தமாக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. செய்தியறிந்து, டி.எஸ்.பி. அங்கு சென்ற பொழுது சுமார் 400 பேர் சாலையில் அமர்ந்து கொண்டு தங்கப்பனைத் தாக்கியவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். டி. எஸ்.பி. தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி அமைதி காக்குமாறு வேண்டி, அவர்களை சமாதானம் செய்து அனுப்பி வைத்தார். போலீஸ் ரோந்து ஏற்பாடு செய்யப்பட்டது. உடனே இதுபற்றிப் புலனாய்வு செய்ய தனி போலீஸ் பிரிவும் டி.எஸ்.பி-யால் ஏற்படுத்தப்பட்டது.

1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 4 ஆம் நாள் அன்று பின்னிரவில் நஞ்சநாடு கிராமத்தைச் சேர்ந்த படுகர்கள், மேல் கோளிக்கரையில் உள்ள அரிசன குடியிருப்பைத் தாக்கியுள்ளதாகத் தெரிகின்றது. இதனையறிந்தவுடன், காவல் துறையினர் அங்கு விரைந்து பார்க்கையில் குற்றவாளிகள் யாரும் அங்கு இல்லை. காயம் அடைந்ததாகப் புகார் கூறிய 15 பேர்கள் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர். இச்சம்பவம் பற்றி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 5 ஆம் நாள் அன்று காலை சுமார் 11 மணியளவில் இதாளரைச் சேர்ந்த படுகர்கள் பெருந்திரளாகக் கூட முற்பட்டனர். லாரிகளிலும் வந்து அங்கு கூடினர். அவர்களைக் கலைந்து செல்லுமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்ட பொழுது அவர்கள் மறுத்திருப்பதாகத் தெரிகின்றது. சுமார் 12.30 மணியளவில் கோத்தகண்டிமட்டம் என்னுமிடத்தில் படுகரல்லாதார் ஆயுதங்களுடன் திரண்டுள்ளதாகச் செய்தி கிடைத்தவுடன் ஆயுத காவல் படையினருடன் டி.எஸ்.பி. அங்கு விரைந்து அவர்களை விரட்டிவிட்டு திரும்புகையில் ஆயுதங்களுடன் படுகர்கள் கோத்தண்டிமட்டம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். அபாயகரமான சூழ்நிலை உருவாக

1979 மார்ச் 24]

[திரு. ச. இராமச்சந்திரன்]

இருந்ததால் அதனைத் தடுக்க குறைந்த அளவு பலப்பிரயோகம் செய்து அவர்கள் விரட்டப்பட்டனர். ஆயினும் மலைச் சரிவுகளில் சிலர் சென்று படுகரல்லாதோரின் வீடுகளுக்கு தீ வைக்க வீடுகளைப் பாதுகாக்க படுகரல்லாதார் விரைந்தனர். இருதரப்பாருக்கும் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதில் மூன்று பேர் இறந்துள்ளனர். இச்சம்பவங்கள் சம்பந்தமாக நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. டி.எஸ்.பி.யும், காவலர் களும் இதளாரில் இருந்தபொழுது படுகர்கள் சிலர் மேலகோளகரை, கீழ கோளகரை, நரிகோளயடா முதலிய இடங்களில் உள்ள அரிசனங்களின் குடியிருப்புகளுக்கு தீ வைத் துள்ளதாகத் தெரிகின்றது. இதனால் 145 குடிசைகள் சேதப்படுத்தப் பட்டுள்ளன. சேதத்தின் அளவு சுமார் ஒன் னரை லட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டு தீ அணைக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. அதிக அளவில் போலீசார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடு கள் செய்யப்பட்டன. மேலும் அசம்பாவிதங்கள் நிகழாத வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனா. டி.அய்.ஜி.-யும், மாவட்ட ஆட்சித் தலைவரும் சம்பவம் நடந்த இடங்களைப் பார்வையிட்டனர்.

1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 9 ஆம் நாள், 1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 10 ஆம் நாள் ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அமைதிக்குழு ஒன்றினைக் கூட்டி அமைதி காக்குமாறும், போலீசாருக்கு உதவியாக இருக்குமாறும் வேண்டிக்கொண்டார். அமைதிகாக்க முழு ஒத்துழைப்புத் தருவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்களின் தொடர்பாக 12 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 175 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்குகளைப் புலனாய்வு செய்ய தனி போலீஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது நிலைமை அமைதியாகவே உள்ளது. எனவே இதுபற்றி சட்டமன்ற பேரவையில் விவா திக்கத் தேவையில்லை என்று கருதிறேன்.

திரு. கே. உச்சி : துணைத் தலைவர் அவர்களே, இதளார், நஞ்சநாடு, எமராடு, பகுதிகளிலே ஏறத்தாழ 50 பேர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் நூற்றுக்கணக்கான குடிசைகள் சேதமடைந்திருக்கின் றன. நஞ்சநாடு பகுதியில் 121 என்று நினைக்கிறேன்— 121 குடிசைகள் தீக்கு இரையாக்கப்பட்டிருக்கின்றன. அதனால் படுகர் இனத்தைச் சேர்ந்த மூன்று வாலிபர்கள் இறந்திருக்கிறார் கள். இதற்காக அந்தக் குடும்பங்களுக்கு நஷ்டயீடு தர, சமீபத்தில் விழுப்புரத்தில் தந்ததைப்போல தர அரசாங்கம் முன்வருமா? இப்படிப்பட்ட குற்றங்கள் எங்கு நடந்தாலும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும். இனி

மேல் இம்மாதிரியான குற்றங்கள் நடக்கக்கூடாது. அதற்கு இந்த அரசு ஒரு நீதி விசாரணை ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது இரு சாரா ருக்கும் தொடர்ந்து, அவர்களிடையே ஏற்பட்டிருக்கிற சந்தேகத்தின் காரணமாகவும் போட்டி, பகைமை காரணமாகவும் தொடர்கதையாக நடைபெற்றிருக்கிற சம்பவம். ஆகவே, குற்றவாளி யாராக இருந்தாலும் கண்டுபிடித்து தக்க நட வடிக்கை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் தனி போலீஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, புலனாய்வு நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. ஆகையால் நீதி விசாரணை இதில் தேவையில்லை.

இழப்புக்கு ஈடு கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அதற்காக விழுப்புரத்திலே நடைபெற்றதையும் எடுத்துக்காட்டி னார்கள். அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான். . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தப் பிரச் சனை முடிந்துவிடட்டும், தயவு செய்து உட்காருங்கள்.

(திரு. க. அரங்கசாமி எழுந்தார்).

நீங்கள் தீர்மானம் கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. க. அரங்கசாமி : நானும் கொடுத்திருக்கிறேன். என் னுடைய பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் 41-வது விதியின்கீழ் ஒரே கட்சியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் தீர்மானம் கொடுத்திருந்தாலும் அவர்களில் ஒருவர்தான் பேசலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அத னால்தான் நான் உங்களை அழைக்கவில்லை. (திரு. க. அரங்க சாமி எழுந்தார்) தயவு செய்து உட்காருங்கள். நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஒத்துழையுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு இது.

[முற்பகல் 11-40]

(ஆ) கிழக்கு முகவை மாவட்டம் நெட்டூர் கண்மாய் பழுதடைந்திருப்பதனால் விவசாயம் பாதிக்கப்பெற்றுள்ளது குறித்து.